## கவிதை அரங்கம்!



கனவில் மட்டும் வந்த
தேவதை நீ,

நனவில் வந்து என்
உயிரை மீட்டாய்!

கோபம் கூட உன்னிடம்
அழகுதான்,

கொஞ்சும் தமிழ் உன்
இதழில் அமுதுதான்.


கடலாய் படர்ந்த உன்
கண்கள் பார்த்தால்,

படகாய் நானும் அதில்
மிதக்கிறேன்!

உப்பில்லாத உணவும்
சுவைக்குமே,

உன் கை விரல் பட்டு நான்
அருந்தினால்!

## வாழ்க்கை தத்துவம்...



பேராசை பெரு நஷ்டம்.

வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

வாய்மையே வெல்லும்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா.

பகுத்தறிவே சிறந்த வெளிச்சம்.

உன்னை நீயே முதலில் நேசி.

நேற்று என்பது முடிந்துபோன கதை.

நாளை என்பது ஒரு கேள்விக்குறி.

இன்று என்பது மட்டுமே நிஜம்.

குறைகளைத் தேடாதே, நிறைகளைக் காண்.

## தேர்தல் திருவிழா!




தேர்தல் திருவிழா களைகட்டியிருந்தது. வேட்பாளர்கள் மக்களைக் கவர விதவிதமான அவதாரங்களை எடுத்தனர். டீ கடையில் டீ போட்டனர்; வடை கடையில் வடை சுட்டனர்; பரோட்டா கடையில் லாகவமாகப் பரோட்டா வீசி அங்கிருந்தவர்களை அசத்தினர். இப்படி ஒவ்வொரு கடையாகச் சென்று, அங்கிருக்கும் வேலையைத் தாங்களே இழுத்துப் போட்டுச் செய்து ஓட்டுச் சேகரித்தனர்.

அதே வரிசையில் இருந்த சரவணன் மற்றும் ஜோசப்பின் கடைக்கும் வேட்பாளர்கள் வந்தனர். ஏதோ ஒரு வேலையைத் தங்கள் கடையில் வேட்பாளர்கள் செய்வார்கள் என இருவரும் ஆர்வத்துடன் காத்திருந்தனர். ஆனால், வேட்பாளரோ சரவணனுக்கு ஒரு போர்வையைப் போர்த்தியும், ஜோசப்பிற்குப் பொன்னாடை அணிவித்தும், "மறக்காமல்வாக்களியுங்கள்" என்று கைகூப்பி வேண்டிவிட்டு அடுத்த கடைக்கு நகர்ந்துவிட்டார்.

டீ குடித்துக்கொண்டே இருவரும் யோசித்தனர். "எல்லாக் கடையிலும் அந்தந்த வேலைகளைச் செய்தவர்கள், நம் கடையில் மட்டும் ஏன் கைகளைக் கூட வைக்கவில்லை?" என்று விடை தெரியாமல் குழம்பினர்.

அப்போதுதான் வேலைக்கு ஆட்கள் வந்து நின்றனர். சரவணன் தன் சலூன் கத்திரிக்கோலை எடுத்தார்; ஜோசப் தான் தைக்க வேண்டிய பழைய செருப்பை எடுத்தார். அவர்கள் இருவருக்கும் அப்போதுதான் புரிந்ததுஅரசியல்வாதிகளுக்கு 'முடி வெட்டுவதும்' 'செருப்புத் தைப்பதும்' கௌரவம் குறைவான வேலைகள் என்று!

வேலையைத் தொடங்கிய சரவணன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்: "அரசியல்வாதிகளுக்குத் தங்களின் ஹேர் ஸ்டைலும் விக்கும் முக்கியம்; காலில் அணியும் ஷூவும் சாக்ஸும் முக்கியம். ஆனால், அதனைச் செய்து தரும் 'நாங்கள்' மட்டும் அவர்களுக்கு முக்கியமில்லை... எங்கள் 'ஓட்டு' மட்டும்தான் முக்கியம் போல!"என நினைத்துக் கொண்டே அரசியல்வாதி போர்த்திய துண்டுகளை செருப்பு கடையில் ஒட்டடை விழுந்த இடத்தில் சாரல் அடிக்காமல் இருக்க மாற்றினான் அதே போல அவன் சேவிங் செய்ய வந்தவருக்கு துண்டினை போர்த்தி விட்டு தங்களது பணிகளில் மூழ்கினார்கள் சரவணனும் ஜோசப்பும்

-----

**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: ஒரு எறும்பு ஏன் யானை மேல உட்கார்ந்துட்டு போகுது?
பதில்: ஏன்னா, எறும்புகிட்ட 'டிரைவிங் லைசென்ஸ்' இல்லையாம்!

மாணவன்: சார், ஒருத்தர் செய்யாத தப்புக்கு அவருக்கு தண்டனை கொடுக்கலாமா?
ஆசிரியர்: கண்டிப்பா கூடாதுப்பா.



## தினம் ஒரு சமையல்



### வெண்டைக்காய் மோர் குழம்பு

**தேவையான பொருட்கள்:**

வெண்டைக்காய்: 10 (துண்டுகளாக நறுக்கியது)
புளிப்பில்லாத தயிர்: 2 கப்
துருவிய தேங்காய்: 1/2 கப்
பச்சை மிளகாய்: 3 - 4
சீரகம்: 1 டீஸ்பூன்
மஞ்சள் தூள்: 1/4 டீஸ்பூன்
உப்பு: தேவையான அளவு

**செய்முறை:**

அரைக்க: தேங்காய், பச்சை மிளகாய் மற்றும் சீரகம் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு மையாக அரைத்துக் கொள்ளவும்.



தயார் செய்ய: தயிரை நன்கு கடைந்து (கட்டிகள் இல்லாமல்), அதனுடன் அரைத்த தேங்காய் விழுது, மஞ்சள் தூள் மற்றும் உப்பு சேர்த்து கலந்து வைக்கவும்.
வதக்க: ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி, நறுக்கிய வெண்டைக்காயைப் போட்டு அதன் பிசுபிசுப்பு போகும் வரை நன்கு வதக்கி தனியாக வைக்கவும்.
கொதிக்க வைக்க: கலந்து வைத்துள்ள தயிர் கலவையை அடுப்பில் வைத்து மிதமான தீயில் சூடுபடுத்தவும். நுரைத்து வரும்போது வதக்கிய வெண்டைக்காயைச் சேர்க்கவும். (குழம்பு கொதிக்கக் கூடாது, நுரைத்து வந்தால் போதுமானது).
தாளிக்க: ஒரு சிறிய கரண்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, வெந்தயம், காய்ந்த மிளகாய் மற்றும் கறிவேப்பிலை தாளித்து குழம்பில் கொட்டினால் சுவையான மோர் குழம்பு தயார்!

## உழிஞை பயன்கள்



புறப்பொருள் வெண்பாமாலை கூறும் "உழிஞை" என்பது சங்க காலத்தில் போரின் ஒரு முக்கிய நிலையாகும். ஒரு மன்னன், பகை மன்னனின் கோட்டைக்குள்ளே புகுந்து அதைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளும் போரே 'உழிஞை' எனப்படும்.
இந்த உழிஞை மலர் (முடக்கத்தான்) மற்றும் உழிஞைத் திணையின் பயன்கள் அல்லது முக்கியத்துவத்தைப் பின்வருமாறு காணலாம்:
1. சங்க இலக்கியம் மற்றும் போர் முறை (திணையின் பயன்கள்)
பண்டைய தமிழர் போரியலில், ஒரு கோட்டையை முற்றுகையிடும்போது உழிஞை பூவைச் சூடிச் செல்வார்கள்.
இதன் பயன்கள்:
வெற்றியின் அடையாளம்: பகைவனின் வலிமையான கோட்டை மதிலை (WALL) தகர்த்து, உள்ளே நுழைந்து வெற்றியடைவதைக் குறிக்கிறது.
வீரர்களின் மன உறுதி: இத்திணையில் பாடப்படும் பாடல்கள் வீரர்களுக்குத் துணிச்சலையும், ஒரு இலக்கை நோக்கி (கோட்டைக்குள் நுழைதல்) முன்னேறும் வேகத்தையும் தருகின்றன.
உத்திமுறை (STRATEGY): கோட்டைக்குள் இருக்கும் பகைவனை வெளியே வரவழைக்காமல், உள்ளேயே சென்று அழிப்பதற்கான போர் நுணுக்கங்களை இது விளக்குகிறது.
2. மருத்துவப் பயன்கள் (முடக்கத்தான் - உழிஞை செடி)
இலக்கியத்தில் கூறப்படும் 'உழிஞை' என்பது இன்றைய முடக்கத்தான் (BALLOON VINE) செடியைக் குறிக்கும்.
இதன் மருத்துவப் பயன்கள் வியக்கத்தக்கவை:
மூட்டு வலி நிவாரணி: முடக்கு + அற்றான் = முடக்கத்தான். இது கை, கால் மூட்டுகளில் ஏற்படும் வலியைப் போக்க வல்லது.
வாத நோய்கள்: வாதம் தொடர்பான நோய்களுக்கு இதன் இலைகளை அரைத்து உண்ணலாம் அல்லது எண்ணெயாகக் காய்ச்சித் தேய்க்கலாம்.
செரிமானப் பிரச்சனைகள்: இது வாயுத் தொல்லையை நீக்கி, குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
தோல் நோய்கள்: சொறி, சிரங்கு போன்ற பிரச்சனைகளுக்கு இதன் இலைச் சாறு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

## சினிமா

## அஜித்தின் பிளாக்பஸ்டர் திரைப்படத்தில் நடிக்க ஆசைப்பட்ட விஜய்.. எந்த படம் தெரியுமா?



தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்கள் விஜய் - அஜித். இவர்கள் இருவரும் தங்களுடைய ஆரம்பகால கட்டத்தில் ராஜாவின் பார்வையிலே என்கிற படத்தில் இணைந்து நடித்திருந்தார்கள். இதன்பின் இவர்கள் இருவரும் எந்த திரைப்படத்திலும் இணைந்து நடிக்காதது ரசிகர்களுக்கு வருத்தம்தான்.

இந்த நிலையில், அஜித்தின் பிளாக்பஸ்டர் திரைப்படம் ஒன்றில் விஜய் நடிக்க ஆசைப்பட்டுள்ளார். அது வேறு எந்த திரைப்படமும் இல்லை மங்காத்தா தான். ஆம், இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் அஜித் மற்றும் அர்ஜுன் இணைந்து நடித்து மாபெரும் வெற்றிபெற்ற மங்காத்தா திரைப்படத்தில் அர்ஜுன் கதாபாத்திரத்தில் நடிக்க விஜய் விரும்பியுள்ளார்.

இதை பற்றி பேட்டி ஒன்றில் இயக்குநர் வெங்கட் பிரபு வெளிப்படையாக கூறியுள்ளார். மங்காத்தா திரைப்படம் வெளியான பிறகு, விஜய் வெங்கட் பிரபுவை நேரடியாக தொடர்பு கொண்டு பாராட்டியுள்ளார்.

அப்போது, "அந்த படத்தில் அர்ஜுன் நடித்த கதாபாத்திரத்தில் என்னை அழைத்திருந்தால், நான் கண்டிப்பாக நடித்திருப்பேன்; அது இன்னும் பெரிய அளவில் இருந்திருக்கும் என வெங்கட் பிரபுவிடம் தெரிவித்துள்ளார். மேலும், "நீங்கள் முன்பே கூறியிருந்தால் நான் முயற்சி செய்திருப்பேன்" என்றும் விஜய் கூறியதாக வெங்கட் பிரபு தெரிவித்துள்ளார்.



தன்னுடைய லேட்டஸ்ட் அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் க்ரித்தி பதிவிட்டுள்ளார். க்ரித்தி ஷெட்டி வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.

இதோ பாருங்க:

## 3 நாட்களில் PATRIOT திரைப்படம் உலகளவில் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



பாக்ஸ் ஆபிஸ் வசூல் என்பதுதான் ஒரு திரைப்படத்தின் வெற்றியை குறிக்கிறது. அதுவும் இன்றைய காலகட்டத்தில் உச்ச நட்சத்திரங்களின் படங்கள் என்றால், ரூ. 100 கோடி வசூல் செய்துவிட்டதா? ரூ. 500 கோடி வசூல் செய்துவிட்டதா என ரசிகர்களே கேட்க தொடங்கிவிட்டனர்.

கடந்த வாரம் ரசிகர்களால் மிகப்பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த திரைப்படம் PATRIOT. இப்படத்தை இயக்குநர் மகேஷ் நாராயணன் இயக்க மம்மூட்டி, மோகன்லால் இணைந்து நடித்திருந்தனர்.

மேலும் நயன்தாரா, பகத் பாசில், குஞ்சாகோ போபன், தர்ஷனா, ரேவதி, ராஜிவ் மேனன் என பல நட்சத்திரங்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த PATRIOT திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. இதனால் கலவையான விமர்சனங்களை எதிர்கொண்டது.

இந்த நிலையில், 3 நாட்களில் PATRIOT திரைப்படம் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இதுவரை உலகளவில் ரூ. 60 கோடி வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களில் எவ்வளவு வசூல் செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.




# சிவகாசியில் நள்ளிரவில் தாக்குதல்; தவெக வேட்பாளருடன் பேசியதால் அதிமுக நிர்வாகி வீட்டில் கல்வீச்சு

**மாஜி அமைச்சரின் ஆதரவாளர் மீது போலீசில் புகார்**



**சிவகாசி, மே.07:** விருதுநகர் மாவட்டம், சிவகாசி தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்தது. வாக்கு எண்ணிக்கை முடிவில் தவெக வேட்பாளர் கீர்த்தனா 68,709 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங். வேட்பாளர் அசோகன் 57,039, அதிமுக வேட்பாளர் ராஜேந்திரபாலாஜி 51,078 வாக்குகள் பெற்றனர். தேர்தல் பிரசாரம் தொடங்கியதில் இருந்து அதிமுகவினர், சிலர் தவெக வேட்பாளருக்கு ஆதரவாக செயல்பட்டதாக அக்கட்சிக்குள் புகைச்சல் இருந்து வந்தது. இந்த சூழலில் அதிமுக 3வது இடத்துக்கு தள்ளப்பட்டது அக்கட்சியினரிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனிடையே, வாக்கு எண்ணிக்கையின்போது தவெக வேட்பாளர் கீர்த்தனாவுடன், திருத்தங்கல்லை சேர்ந்த அதிமுக மாநில எம்ஜிஆர் இளைஞரணி துணைச்செயலாளர் பலராம் பேசிக்கொண்டு இருந்துள்ளார். இதனால் அங்கு நின்றுகொண்டிருந்த அதிமுக முகவர்கள் சிலர் கோபமடைந்ததாக கூறப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை முடிந்து, திருத்தங்கல் ஸ்டாண்டர்ட் காலனியில் உள்ள தனது வீட்டிற்கு பலராம் திரும்பினார். இரவில் குடும்பத்துடன் தூங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவு 12 மணியளவில் 2 பைக்குகளில் அங்கு வந்த மர்மநபர்கள், பலராம் வீட்டின் மீது சரமாரியாக கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார் கண்ணாடி நொறுங்கியது. பின்னர், மர்மநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். இதுகுறித்து பலராம், திருத்தங்கல் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். மேலும் பலராம் வீட்டில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து கல்வீச்சு சம்பவத்தில் ஈடுபட்டதாக அதிமுகவின் விருதுநகர் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் புதுப்பட்டி சங்கர், திருத்தங்கல் மாரீஸ்வரன் மற்றும் 6 பேர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, சிவகாசி டிஎஸ்பி அனில்குமாரிடம், ஆதரவாளர்களொடு சென்று பலராம் புகார் மனு அளித்தார். மனுவில், ராஜேந்திர பாலாஜியின் தோல்விக்கு நீயும், உன்னைச் சார்ந்தவர்கள் தான் காரணம் என்றும், வீட்டில் கல்லெறிந்து விட்டு பயங்கர ஆயுதங்களுடன் கொலை மிரட்டல் விடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக டிஎஸ்பி உறுதியளித்தார்.

# நிர்வாண நடனத்தை கண்டித்த தொழிலாளி கொலை

**சென்னை, மே.07:** திருவொற்றியூர் ஒண்டிக்குப்பம் பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன் (35). கூலித்தொழிலாளியான இவர், நேற்று மாலை அதே பகுதியில் உள்ள கடற்கரையில் தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக மல்லிகாபுரத்தை சேர்ந்த ஆகாஷ் (20) என்பவர் வந்துள்ளார். அப்போது அந்த இளைஞருக்கும் சீனிவாசனுக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து ஆகாஷ் திடீரெனத் தனது ஆடைகளை அவிழ்த்துக் கீழே போட்டுவிட்டு, நிர்வாணமாக நின்றபடி வெறுப்பேற்றும் வகையில் நடனம் ஆடினார். இதனால் ஆத்திரமடைந்த சீனிவாசன் மற்றும் அவரது நண்பர்கள் ஆகாஷைத் தாக்கி அங்கிருந்து விரட்டினர். இதன்பின்னர் சீனிவாசனும் அவரது நண்பர்களும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இந்த நிலையில், இரவு 11 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே வந்த சீனிவாசன், அதே பகுதியில் உள்ள கடற்கரை அருகே ஒரு கோயில் வாசலில் தூங்கினார். அப்போது அங்கு வந்த ஆகாஷ், சீனிவாசன் தூங்குவதைக் கண்டு ஆத்திரமடைந்தார்.

கொலைவெறியில் இருந்த ஆகாஷ், அருகில் இருந்த பெரிய பாறாங்கல்லை எடுத்து சீனிவாசனின் தலையில் போட்டார். இதில் பலத்த காயமடைந்த சீனிவாசன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள், ஆகாஷை விரட்டிப் பிடித்து தர்ம அடி கொடுத்தனர்.

பின்னர் அவரை திருவொற்றியூர் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர். சீனிவாசனின் உடலைக் கைப்பற்றிய போலீசார், பிரேதப் பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், பொதுமக்கள் தாக்கியதில் பலத்த காயமடைந்த ஆகாஷும் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பாறாங்கல்லை தலையில் போட்டு கூலி தொழிலாளி கொடூர கொலை: வாலிபர் கைது

**திருவொற்றியூர், மே.07:** திருவொற்றியூர் கடற்கரையில் உள்ள கோயிலில் தூங்கிக்கொண்டிருந்தபோது பாறாங்கல்லை தலையில் போட்டு கூலி தொழிலாளியை கொலை செய்த வாலிபரை கைது செய்தனர். சென்னை திருவொற்றியூர் ஒண்டிக்குப்பம் பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன் (35). இவர் கூலி தொழிலாளி. நேற்று மாலை அங்குள்ள கடற்கரையில் சீனிவாசன், தனது நண்பருடன் பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது திருவொற்றியூர் மல்லிகாபுரம் பகுதியை சேர்ந்த ஆகாஷ் (20) என்பவர் போதையில் வந்து சீனிவாசனிடம் தகராறில் ஈடுபட்டதுடன் தனது ஆடைகளை அவிழ்த்து அரை நிர்வாணமாக சீனிவாசன் மற்றும் அவரது நண்பரை வெறுப்பேற்றும் வகையில் நடந்துள்ளார். RailFreight

இதனால் கடும் ஆத்திரம் அடைந்த சீனிவாசன், ஆகாஷை அடித்து விரட்டியுள்ளார். இதன்பின்னர் சீனிவாசன், அவரது நண்பர் ஆனந்தன் ஆகியோர் சென்றுவிட்டனர். இந்த நிலையில், சீனிவாசன் மதுஅருந்திவிட்டு வந்து இரவு 11 மணி அளவில் கடற்கரையில் உள்ள கோயிலில் தூங்கியுள்ளார். அப்போது அங்கு வந்த ஆகாஷ், "என்னையா அடித்தாய்" என்று கத்தியபடி அங்கு கிடந்த பெரிய பாறாங்கல்லை எடுத்து சீனிவாசன் தலையில் போட்டு கொலை செய்துள்ளார். இதை பார்த்து அவ்வழியாக சென்ற நபர் சத்தம் போட்டுள்ளார்.

இதனால் ஆகாஷ் தப்பியோடியபோது பொதுமக்கள் வந்து அவரை விரட்டி பிடித்து தர்ம அடி கொடுத்து போலீசில் ஒப்படைத்தனர். இதையடுத்து திருவொற்றியூர் போலீசார் சென்று சீனிவாசனின் உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். காயம் அடைந்த ஆகாஷ் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார். இதுகுறித்து போலீசார் வழக்குபதிவு செய்துள்ளார்.

# மலைப்பாதையில் காட்டு யானை உலா - ஆபத்தை உணராமல் புகைப்படம் எடுத்த சுற்றுலா பயணிகள்



**நீலகிரி, மே.07:** சமவெளி பகுதிகளில் கோடை வெயில் வாட்டி வருகிறது. இதனால் வனப்பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு உள்ளதால், தண்ணீர் மற்றும் உணவு தேடி காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் நீலகிரி மலைப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வருகின்றன.

குறிப்பாக காட்டு யானைகள் குன்னூர், கோத்தகிரி மலைப்பாதைகளில் நடமாடி வருகின்றன.

இதனை வனத்துறையினர் கண்காணித்து வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும், அவ்வப்போது காட்டு யானைகள் சாலையோரத்தில் நடமாடி வருகின்றன.

இந்த நிலையில் நேற்று குன்னூர் - மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் சாலையோரத்தில் காட்டு யானை ஒன்று நடமாடியது.

அப்போது சாலையோரம் நின்றிருந்த யானை அருகே சுற்றுலா பயணிகள் சென்று ஆபத்தை உணராமல் புகைப்படம் எடுத்தனர். இதனால் ஆக்ரோஷம் அடைந்த யானை துதிக்கையை உயர்த்தி எச்சரிக்கை செய்தது. பின்னர் யானை அங்கிருந்து வனப்பகுதிக்குள் சென்றது.

காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் அருகே சென்று சுற்றுலா பயணிகள் அத்துமீறுவதை வனத்துறையினர் கண்காணித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனவிலங்கு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# களக்காடு அருகே ஓட ஓட விரட்டி வக்கீல் படுகொலை: தங்கை தற்கொலையால் மைத்துனர் வெறிச்செயல்



**களக்காடு, மே.07:** களக்காடு அருகே தந்தை கண் முன்பு வக்கீல் ஓட ஓட விரட்டி படுகொலை செய்யப்பட்டார். தங்கை தற்கொலைக்கு பழி தீர்க்க வெறிச்செயலில் ஈடுபட்ட மைத்துனர் உள்பட 2பேர் கைது செய்யப்பட்டனர். நெல்லை மாவட்டம், களக்காடு அருகே உள்ள கடம்போடுவாழ்வை சேர்ந்தவர் சங்கரபாண்டி மகன் பூலுடையார் என்ற பாண்டி (35). இவர் நெல்லை கோர்ட்டில் வக்கீலாக உள்ளார். இவருக்கும் சிவராமமங்களத்தை சேர்ந்த ராஜலெட்சுமி என்பவருக்கும் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

தம்பதி இருவரும் நெல்லை தியாகராஜநகரில் வசித்து வந்தனர். இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. கடந்த 3ம் தேதி பூலுடையாருக்கும், அவரது மனைவி ராஜலெட்சுமிக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனம் உடைந்த ராஜலெட்சுமி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு பின் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது. ராஜலெட்சுமி தற்கொலை செய்து கொண்டதற்கு பூலுடையார் தான் காரணம் என்று ராஜலெட்சுமியின் சித்தி மகன் சிவராமமங்களத்தை சேர்ந்த அருணாசல ராஜா (30) கருதினார்.

இதற்கிடையே மனைவி இறந்த துக்கத்தில் தவித்த பூலுடையார் கடம்போடு வாழ்வில் உள்ள தந்தை வீட்டிற்கு வந்தார். உறவினர்கள் அவருக்கு ஆறுதல் கூறி வந்தனர். நேற்று மதியம் பூலுடையார் வீட்டில் இருந்தார். அப்போது அருணாசல ராஜா உள்பட 3 பேர் திடீர் என அரிவாளுடன் வீட்டிற்குள் புகுந்தனர். அவர்களை கண்டு திடுக்கிட்ட பூலுடையார் வீட்டின் பின்புறம் வழியாக தப்பி ஓடினார். எனினும் மூவரும் அவரை ஓட ஓட விரட்டி சென்றனர். அவர்களிடம் இருந்து தப்புவதற்காக பூலுடையார் வேகமாக ஓடிய போது தெருவில் கிடந்த கல் தட்டி கீழே விழுந்தார்.

இதையடுத்து அவரை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். இதில் ரத்த வெள்ளத்தில் மிதந்த பூலுடையார் சிறிது நேரத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். பின்னர் 3 பேரும் அங்கிருந்து காரில் ஏறி தப்பிச் சென்றனர். இதுகுறித்து களக்காடு போலீசார் வழக்குப்பதிவு செய்து, அருணாசல ராஜா, அவரது உறவினர் ராம் (29) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். மேலும் ஒருவரை தேடிவருகின்றனர். கடந்த 2ம் தேதி களக்காடு ஜெ.ஜெ நகரில் மனநிலை பாதித்த வாலிபர் சுரேஷ் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுச்சேரியில் திமுக, பாஜகவை விட தவெகவுக்கு அதிக வாக்கு சதவீதம்!

**புதுச்சேரி, மே.07:** புதுச்சேரியில் திமுக, பாஜகவை விட தவெக அதிகமாக வாக்கு சதவீதம் பெற்றுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 தொகுதிக ளில், திமுக 5 , பாஜக 4, தவெக 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

தவெகவை விட திமுக, பாஜகவுக்கு பெரிய அளவில் எம்எல்ஏக்கள் எண்ணிக்கை கிடைத்திருப்பதாக தெரியலாம். ஆனால் வாக்கு சதம் இரு கட்சிகளை விட தவெகவுக்கு அதிகம். புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் 91.23 சதம் வாக்குப் பதிவானது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடந்தது. புதுவை சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் பிரதான தேசிய, மாநில அரசியல் கணக்குகளை தலைகீழாக மாற்றி உள்ளது.

22 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 492 ஓட்டுகளை பெற்று, 17.5 சதவீதத்துடன் 2-ம் இடத்தை பிடித்துள்ளது. யாரும் எதிர்பாராத விதமாக, தவெக புதுவை அரசியலில் ஒரு புதிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

2 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுகவில், உப்பளம் தொகுதியில் அன்பழகனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது. இக்கட்சி பெற்ற வாக்குச் சதம் 1.09. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இத் தேர்தலில் 0.05 வாக்குச் சதவீதத்தையும், மார்க்சிஸ்ட் கட்சி 0.06 சதத்தையும்,நாதக 1.36 சதவீதத்தையும் பெற்றுள்ளன. விசிக 0.14 சதவீத வாக்குகள் பெற்றுள்ளது.

கடந்த 2021 தேர்தலில் என்.ஆர்.காங்கிரஸ் 25.85 சதம் வாக்குகள் பெற்றது. திமுகவுக்கு 18.51 சதம். காங்கிரஸ் கட்சிக்கு 15.71 சதம். பாஜகவுக்கு 13.66 சதம். அதிமுகவுக்கு 4.14 சதம். நாதக 3.37 சதம். விசிகவுக்கு 0.67 சதம்.

கடந்த தேர்தலைக் காட்டிலும் இந்தத் தேர்தலில் என்.ஆர்.காங்கிரஸ் 2.73 சதம் வாக்குகள் குறைவாகவும், திமுக 4.77 சதம் குறைவாகவும், பாஜக 1.47 சதம் குறைவாகவும், அதிமுக 3.05 சதம் குறைவாகவும், நாதக 2.01 சதம் குறைவாகவும், விசிக 0.53 சதம் குறைவாகவும் பெற்றுள்ளன. இதற்கெல்லாம் காரணம் புதிதாக போட்டியிட்ட தவெகதான். இந்தக் கட்சிக்கு வாக்குகள் பிரிந்து சென்றுள்ளன. மாறாக காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் கூடுதலாக கடந்த தேர்தலைக் காட்டிலும் 1.83 சதம் வாக்குகள் கூடுதலாகக் கிடைத்துள்ளன.

அதற்குக் காரணம் 6 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டி வேட்பா ளர்கள் களத்தில் இருந்துதான். ஆனாலும் கடந்த தேர்தலை விட வேட்பாளர் வெற்றி சரிந்து, வெற்றி பெற்ற வேட்பாளர் ஒரே ஒருவராக சுருங்கியுள்ளது.

# தூத்துக்குடி: முன்விரோதத்தில் மீனவருக்கு கத்திக்குத்து- 3 பேர் கைது




**தூத்துக்குடி, மே.07:** தூத்துக்குடி தாளமுத்துநகர் கணபதிநகரைச் சேர்ந்தவர் வினோத் (வயது 32). மீனவரான இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். நேற்று காலை கடலுக்கு சென்றுவிட்டு, மாலை 7 மணியளவில் அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். மொட்டைக்கோபுரம் அருகே அவர் வந்துகொண்டிருந்தபோது, அங்கு மறைந்திருந்த 3 பேர் கொண்ட கும்பல் அவரை வழிமறித்துள்ளது.

பின்னர் அவர்கள் வினோத்தை சரமாரியாக தாக்கி, கத்தியால் குத்தியுள்ளது. இதில் பலத்த காயமடைந்த அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவம் குறித்த புகாரின்பேரில், தாளமுத்துநகர் இன்ஸ்பெக்டர் அருளப்பன் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை செய்தார்.

விசாரணையில், மேற்சொன்ன தாக்குதலில் ஈடுபட்டவர்கள் திரேஸ்புரத்தைச் சேர்ந்த கென்னடி மகன் பிரசாந்த்(25), சுனாமி காலனியைச் சேர்ந்த மைக்கேல் மகன் ஜேம்ஸ்(25) மற்றும் மாதவன் நாயர் காலனியைச் சேர்ந்த ஜார்ஜ் மகன் சூசைய்யா(47) என்பது தெரியவந்தது.

இவர்களுக்கும் வினோத்தின் தம்பிக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் 3 பேரும் வினோத்தை தாக்கியது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே பிடிபட்ட 3 பேரையும் போலீசார் கைது செய்து தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தவெக 35%, திமுக 24%, அதிமுக 21% - தமிழகத்தில் கட்சிகளின் வாக்கு வங்கியில் ஏற்றமும், சறுக்கலும்



**கட்சிகளின் வாக்குவங்கி விவரம்**

| கட்சிகள் | 2026 | 2024 | 2021 |
|---|---|---|---|
| தவெக | 34.92% | --- | ---- |
| திமுக | 24.19% | 26.93% | 37.70% |
| அதிமுக | 21.21% | 20.46% | 33.29% |
| நாம் தமிழர் | 4% | 8.10% | 6.56% |
| காங்கிரஸ் | 3.37% | 10.68% | 4.27% |
| பாஜக | 2.97% | 11.24% | 2.6% |
| விசிக | 1.09% | 2.25% | 1% |
| தேமுதிக | 1.20% | 2.59% | 0.4% |
| சிபிஐ | 0.66% | 2.15% | 1.1% |
| சிபிஎம் | 0.60% | 2.5% | 0.9% |
| முஸ்லிம் லீக் | 0.29% | 1.17% | 0.5% |

சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு கடந்த ஏப்.23-ம் தேதி நடைபெற்றது. இதன் வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தவெக 108 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து வரலாறு படைத்துள்ளது.

தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் பெற்ற வாக்குகள் மற்றும் அதன் சதவீதம் குறித்த முழுமையான விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதன்படி, இந்தத் தேர்தலில் தவெக போட்டியிட்ட 233 இடங்களில் 108 இடங்களை கைப்பற்றியுள்ளது.

மொத்தமாக ஒரு கோடியே 72 லட்சத்து 26,209 (34.92%) வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, திமுக 176 இடங்களில் போட்டியிட்டு 59 இடங்களை வென்றுள்ளது. இந்த கட்சி ஒரு கோடியே 19 லட்சத்து 29,144 (24.19%) வாக்குகளை பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

அதேபோல், மொத்தம் 172 இடங்களில் களம் கண்ட அதிமுக 47 இடங்களை கைப்பற்றியுள்ளது.

இக்கட்சி ஒரு கோடியே 4 லட்சத்து 62,146 (21.21%) வாக்குகள் பெற்றுள்ளது. இதுதவிர, நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு, அனைத்திலும் தோல்வியுடன், 19 லட்சத்து 72,537 (4%) வாக்குகளைப் பெற்றது.

அதேபோல், தேசிய கட்சிகளான காங்கிரஸ் 28 இடங்களில் போட்டியிட்டு 5-ல் வென்றது. இதன் வாக்கு விகிதம் 3.37 சதவீதமாகும். பாஜக 33 இடங்களில் போட்டியிட்டு ஓரிடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது.

இக்கட்சி 2.97 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இதுதவிர, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிட்ட 2 இடங்களிலும் (0.29%) வெற்றி பெற்றது. தேமுதிக 10-ல் போட்டியிட்டு ஓரிடத்தில் (1.20%) வென்றது.

இந்திய கம்யூ. கட்சி 5-ல் போட்டியிட்டு 2 (0.66%) இடங்களிலும், மார்க்சிஸ்ட் 5-ல் போட்டியிட்டு 2 இடங்களிலும் (0.60%) வெற்றி பெற்றுள்ளன.

இதுதவிர, பாமக 18 இடங்களில் போட்டியிட்டு 4-ல் வெற்றி பெற்றது. இதன் வாக்கு விகிதம் 2.37 சதவீதமாகும். விசிக 8 தொகுதிகளில் போட்டியிட்டு 2 இடங்களை ((1.09%) கைப்பற்றியுள்ளது. அமமுக 11 இடங்களில் போட்டியிட்டு ஓரிடத்தில் (0.86%) மட்டுமே வென்றுள்ளது.

மேலும், 234 தொகுதிகளிலும் நோட்டாவுக்கு ஒரு லட்சத்து 99,801 (0.41%) வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், இந்த தரவுகளை 2021 சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 2024 மக்களவைத் தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடும் போது இந்த முறை அதிமுக, திமுக, நாம் தமிழர் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் வாக்கு வங்கி சரிவை சந்தித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

